# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

## அறிவித்தல்

**2024ஆம் ஆண்டு க.பொ.த. (உ/தர) பரீட்சையின்படி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் இடைநிறுத்தப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 2024/2025 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 2024ஆம் ஆண்டு க.பொ.த (உ/தர) பரீட்சைக்கான இடைநிறுத்தப்பட்ட பெறுபேறுகளின் அடிப்படையில் 2024/2025 கல்வியாண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பதாரர்களிடமிருந்து **2025 ஆனி 17ம்** திகதி **முதல் 2025 ஆடி 1ம்** திகதி வரையான காலப்பகுதிகளில் ஆன்லைன் விண்ணப்பங்களை கோர பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) தீர்மானித்துள்ளது.

மேலும், விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது குறித்த மேலதிக விபரங்கள், UGCஇன் உத்தியோகப்பூர்வ இணையத்தளத்தில் (www.ugc.ac.lk) வெளியிடப்பட்ட 2024/2025 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை கோருவது குறித்து முன்னர் வெளியிடப்பட்ட செய்தித்தாள் விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**முக்கியம்**

இச் சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரர்களுக்கு கற்கைகளுக்கான முன்னுரிமை வரிசையை ONLINE மூலமாக மாற்றுவதற்கு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து ஒரு வார கால அவகாசம் மட்டுமே வழங்கப்படும் என்பதை நினைவில் கொள்ளவும்.

மேலும், பல்கலைக்கழகங்கள்/ வளாகம்/ உயர் கல்வி நிறுவகங்களால் ஏற்கனவே நடாத்தி முடிக்கப்பட்ட தகுதிகாண் பரீட்சை/ நடைமுறைப் பரீட்சைகளில் விண்ணப்பதாரர் பங்கேற்கவில்லை என்றால் அத் தகுதிகாண் பரீட்சை/ நடைமுறைப் பரீட்சைகளுடன் கூடிய கற்கைகளுக்கு விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்க முடியாது என்பதையும் நினைவில் கொள்ளவும்.

தலைவர்

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

17.06.2025